### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்

# செல்வப்பெருந்தகை பரப்புரையை முடக்க சதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஏப். 22-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சகோதரர் செல்வப் பெருந்தகை அவர்களது பரப்புரையை முடக்க நினைக்கும் சதிக்குக் கடும் கண்டனம்!**

**இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதை மறந்து, தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இன்னும் 48 மணிநேரம் கூட இல்லாத நிலையில், எதிர்க்கட்சியினரை முடக்க, தோல்வி பயத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துகொண்டிருக்கும் அட்டூழி யத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.






மன்னார்குடி தொகுதி வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பி.ராஜா, நீடாமங்கலம் பேரூர் பகுதிகளில் வாக்கு சேகரித்தார். அப்போது 2026ல் அமையவிருக்கும் கழக ஆட்சிக்கு முன்னோட்டமாக செங்கோல் வழங்கப்பட்டது. முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன், பேரூர் செயலாளர் ராமராஜன் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார இருசக்கர வாகன பயணத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையிலும் ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், எம்.பி. எடிசன் ஆகியோர் முன்னிலையிலும் கோட்டூர் வடக்கு ஒன்றிய கழகத்தைச் சேர்ந்த இளைஞர் அணியனிர் பெருந்திரளாக பங்கேற்றனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு& கர்நாடகா மாநில எல்லையான பாகலூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் உள்ள 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஓசூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மேயர் சத்யா வாக்காளர்களை நேரில் சந்தித்து கழகத் தலைவரின் சாதனைகளை பட்டியலிட்டு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் ஒன்றியச் செயலாளர் கஜேந்திர மூர்த்தி மற்றும் கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் உடன் இருந்தனர்.



ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 22 பகுதிகளில் பார்வதி நகர், தேர்பேட்டை, ராஜ கணபதி நகர், ராம் நகர், உள்ளிட்ட பகுதியில் ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.ஏ. சத்யா 22 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களிடம் கடந்த ஐந்து ஆண்டுகளில் சாதனை செய்த தி.மு.க. ஆட்சியில் அரசு தலைமை மருத்துவமனை, பேருந்து நிலையம், பாதாள சாக்கடை குடிநீர் வசதி சாலை வசதிகள் உள்ளிட்ட எண்ணற்ற அடிப்படை வசதிகள் செய்ததை மக்களிடம் சொல்லி வாக்குகளைச் சேகரித்தார். உடன் மாதேஸ்வரன், சென்னீரப்பா, ராஜா கோபாலகிருஷ்ணன், ராமு, சக்திவேல், சுமன், நாகராஜ், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திராவிடம் பாடிய செந்தமிழ்க் கவிஞரே, பராவுவோம் உம்மையே பைந்தமிழ் பாடியே!



இந்தியாவைப் பாடுதற்கு
எத்தனையோ
கவிஞர்கள்
வந்துதித்த காலத்தில்
வையத்து முதல்மொழி
செந்தமிழைப் பாடிய
திராவிடக் கவிஞனே !
இந்தநாள் உமைப்பற்றி
எண்ணுகின்ற நினைவுநாள் !

அந்தநாள் முதலாக
ஆரியத்தை எதிர்த்திங்கே
சிந்துபாடித் தமிழரிடம்
திண்மையை வளர்த்தவர்நீர்!
முந்திய காலத்து
மூவேந்தர் மேன்மையும்
செந்தமிழ் பெற்றிருந்த
செம்மொழி முதன்மையும்

விந்தியத்திற்கு அப்பாலே
வெற்பிமயம்
கங்கையெல்லாம்
பந்தாடி வெற்றியைப்
ப டைத்திருந்த வீரமும்
சிந்தையைக் கிளருமாறு
தீட்டிய கவிதைகள்
வெந்தழல் கதிரொளிபோல்
வெண்ணிலாக்
குளிர்ச்சியைப்போல்
எந்தநாள் ஆனாலும்
எழுச்சியைத் தருமன்றோ!

வடக்கர்கள் தறுக்கர்கள்
வாய்வீரத் தடியர்கள்
இடக்கினைச் செயநினைத்து
எதிர்த்திடத் தொடங்கினால்
அடக்கடா
இல்லையேல்
அழிவடா உமக்கென்று
தடந்தோள்கள் உயர்த்தியே
தறுகண்மை ஓங்கிடத்
தடதடஎன ஓடவிட்டுத்
தரைமட்டம் ஆக்குதல்
கடனென்று தமிழர்க்குக்
கனலேற்றி விட்டவர்நீர்!
முடம்பட்டால் வாழ்க்கையே
முடிந்துவிடும் ஆதலால்
திடங்கொண்டு
தமிழ்க்கெதிராய்த்
திரள்வோரை விரட்டுவதே
கடலிலே கலம்செலுத்திக்
கடாரம்ஈழம் வென்றவரின்
அடல்வீரம் ஆகுமென
அனற்பாடல் புனைந்தவர்நீர்!

விடுதலை என்கின்ற
விழுமிய வேட்கையை
எடுத்துரைத்துப் பாடல்கள்
எண்ணற்றுத் தீட்டியவர்
தடுத்தெவர் வந்தாலும்
தள்ளிவிட்டுப் போவென்றீர்
கெடுதலைச் செய்வோரைக்
கிழித்தெறிந்து
போடுமென்றீர்!
திடுதிப்பென்று எவர் எவரோ
தில்லிக்குத். தெண்டனிட்டு
அடிமைகளாய்த் திரிகின்றார்
அவமானம் புரிகின்றார் !
ஒடிபட்ட சுள்ளிகளாய்
உதவாத கள்ளிகளாய்
மடிவுற்ற செத்தைகளாய்
மண்டியிடும் இவர்களைத்
துடித்தெழுந்து இடித்துதறித்
தூக்கியே எறிவதற்கு
வெடித்தெழும் இவர்பாடல்
வேகத்தைத் தருமன்றோ!

உம்முடைய கவிதைகளை
உதடுகள் உச்சரித்தால்
எம்முடைய உள்ளத்தில்
ஏறிடும் எழுச்சியே!
செம்மைமிகும் கவிதைகளால்
செந்தமிழ் சிறக்கிறது
வெம்மையுண்டு
தண்மையுண்டு
விடுதலைக்கு வழியுமுண்டு
தம்மையும் உணர்வதற்குத்
தன்மானம் பகுத்தறிவு
விம்மிதம் கொள்வதால்
விடியல்தான் தோன்றியே
கும்மிருட்டுப் போவதற்குக்
குடும்ப விளக்கு ஆகின்ற
செம்பலாக் கவிதைகள்
தீட்டியவர் தமிழரின்
தெம்பான சிந்தையில்
செந்தமிழாய்த் திகழுவார் !

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

வீரத்தாய் தீட்டியே
விடுதலை காட்டியவர்,
ஊராரைத் திரட்டியே
ஒருபுரட்சிக் கவிபடைத்தார்
ஆராரோ பாடியவர்
அறியாமை சாடியவர்
பாராளும் உரிமைக்குப்
பாண்டியன் பரிசளித்தார்
யார்யாரோ தமிழ்நாடு
எமக்கென்று ஆளவந்தால்
போர் வீரர் ஆகுங்கள்
பொடிப்பொடி
ஆக்குங்கள்!

சேர்வீரே
தமிழர்களே
சேர சோழ பாண்டியர்க்குப்
பேரர்களே, எதிரிகளைப்
பிடரிபட ஓட்டுங்கள்!

நீராருங் கடலுடுத்த
நெடுந்தமிழ் நாடுதான்
ஆரியம் மேய்வதற்கு
ஆளில்லாத்
தோட்டமல்ல!

பேரறிஞர் அண்ணாவால்
பெருநிதி பெற்றவரின்
கூரறிவை வளர்க்கின்ற
கொள்கைத்தீங்
கவிதைகளில்
சீரிய பகுத்தறிவும்
தன்மானச் செம்மாப்பும்
வீரியமாய் இருக்கையில்
வேற்றவர்க்கு என்னவேலை?
சூரியன்முன் மின்மினிகள்
சுடரிட்டும் என்ன பயன் ?

வடக்கினை அடக்குதற்கு
வாளெடுத்தார் கவிதையில்;
இடக்கினைச் செய்பவர்க்கு
எழுதியவர் இறுதிமுறி!
துடுக்கினைத் தொடங்கினால்
தொலைத்திட இயற்றியவர்
கடன்மொழி இந்தியின்
எகட்டாயத் திணிப்பினை
உடன்றெழுந்து எதிர்த்தவர்
ஓராயிரம் பாடியவர்!

பேராட்டம் போடுகின்ற
பெருங்கொடுமை யாளரைப்
போராட்டம் மூலமே
போக்கிட முடியுமென்று
ஊரோட்டம் மாற்றுகின்ற
உயிரோட்டக் கவிதைகளை
வேரோட்டம் பிடுங்குகிற
மிகுபுரட்சிக் கருத்துகளை
நீரோட்டம் போலவே
நிரம்பவும் பாய்ச்சிய
பாராட்டத் தக்கவர்
பாரதிதாசனாரின்
தேரோட்ட
நினைவுகள்
செந்தமிழாய் நிலவுமே!

இன்றுநீர் இல்லையென
ஏங்குகிறோம், ஏனெனில்
பன்றிகள் பலகூடிப்
பாய்புலிமுன் நிற்பதுபோல்
ஒன்றியம் ஆளுகின்ற
உறுமிகள் தமிழ்நாட்டைக்
குன்றிடச் செய்வதற்குக்
கொத்தடிமைக்
கூட்டத்தை,
தின்றுபல ஊழலில்
திளைத்திருக்கும்
கும்பலை
மன்றிலே ஆடவிட்டு
மாத்துயர் தந்தாலும்
நின்றெதிர்க்கும் ஆற்றலுடன்
நெஞ்சுரத் தளபதி
வென்றெடுக்கும்
வீரத்தின்
வெற்றியைப்
பாடுதற்கு
இன்றுநீர் இல்லையென
ஏங்குகின்றோம்,ஆனாலும்
குன்றெதிர்த்துத்
தூளாக்கும்
கோடுயர் வெற்றியை
நன்றாகப் பாட்டிலே
நரம்பிரும்பு ஆகுமாறு
அன்றுநீர் தீட்டியவை
ஆயிரம் அணுக்குண்டு!

என்றும்நீர் இருப்பீரே,
இறப்பில்லை உமக்கிங்கே!
நின்றுலகம் சுழலுமட்டும்
நினைவிலே நிலைப்பீரே!